**OS No.64/2021**

PW 1 – காமாட்சி

நாள் 23.10.2025

**இடைநிலை மனு எண்கள் 7/2025 மற்றும் 8/2025 அனுமதிக்கப்பட்டு வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

என் தரப்பில் வா.சா.ஆ.14 வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டதை என் பிராதில் சொல்லவில்லை. பிராதில் சொல்லப்படாத விபரம் சம்பந்தமாக என் முதல் விசாரணையில் சொல்லமுடியாது என்பது வரையறை செய்யப்பட்ட சட்டம் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

நான் சட்டத்திற்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ. 4 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.14 ஆவணமும் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான்.

வா.சா.ஆ 14 ஆவணத்திற்கு முத்திரைத்தாள் கட்டணம் கட்டவில்லை என்றால் எனக்கு அது பற்றிய விபரம் தெரியாது. வா.சா.ஆ 3,4 மற்றும் வா.சா.ஆ 14 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்பதால் முத்திரைத்தாள் கட்டணம் கட்டவில்லை என்றால் சரியல்ல.

நான் என் முதல் குறுக்கு விசாரணையில் 1984 ம் ஆண்டில் பெரியசாமி மகன் செல்லத்துரைக்கு ஒத்தி பத்திரத்தை என் அப்பா எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உண்மையை மறைக்கும் விதமாக மூன்றாவது நபர் சொல்லி நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வழக்கு சொத்து ஆரம்பம் முதலே என் அப்பா

அனுபவத்தில் உள்ளது என்றும், வருவாய் துறை ஆவணத்திலும் எனது அப்பா பெயர் தான் உள்ளது என்றும் ஒப்புக்கொண்டுள்ளதால் எந்த காலத்திலும் Prescriptive title ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.

உரிமைமூலத்தை நிரூபணம் செய்யும் வகையில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஒத்திப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். உரிமைமூலத்தை நிரூபணம் செய்யும் வகையில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யதாதால் வழக்கு சொத்தைப் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**